கண் வைத்திய நிபுணர்களினால் சிபார்சு செய்யும் கண்ணாடி கலைச் சரியாகத் தொடுப்பவர்கள்.
எஸ்.எம்.பெர்ணண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி, இலங்கை வங்கி அருகாமை யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: இரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

S.M. Fernando
OPTICIANS
SIGHT TESTED PRESCRIPTIONS ACCURATELY DISPENSED
580, HOSPITAL ROAD, NEAR BANK OF CEYLON JAFFNA.

சுபர் 5: பிரமோதூத ஆவணி மீ 29 உ வெள்ளிக்கிழமை (14 : 09 : 1990) ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 24 UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 194

# கோட்டையை மீட்கும் முயற்சி முறியடிப்பு!

# பொம்மர் ஒன்றும் சுட்டு வீழ்த்தப்பட்டது!!

## யாழ். ஆயர் இல்லமும் பீரங்கி குண்டினால் சேதம்

யாழ்ப்பாணம், செப். 14

கடற்பகுதியில் இருந்து நேற்று மேற்கொள்ளப்பட்ட பீரங்கிக்குண்டு தாக்குதலினால் யாழ். ஆயர் இல்லத்தின் ஒரு பகுதியும் சேதமுற்றது.

பீரங்கிக் குண்டு சுவரை நொருக்கி, உள்ளே சென்று சேதத்தை ஏற்படுத்தியது.

இந்தச் சம்பவத்தின் போது யாழ். ஆயர் இல்லத்தில் இருந்த செல்வம் அமிர்தநாதன் என்பவர் படுகாயமடைந்தார்.

காயமடைந்த பிரஸ்தாப நபர் யாழ். இல்லத்தில் பணி புரிபவர் ஆவார். [ஒ-15]

## நகரின் நாலா புறமும் பீரங்கித் தாக்குதலால் சேதம்

யாழ்ப்பாணம், செப். 14

யாழ். நகரில் நேற்று அதிகாலை ஆரம்பமான பீரங்கித் தாக்குதல்கள் முழு நாளும் ஓயவில்லை.

நகரில் நாலா புறங்களிலும் பீரங்கி வேட்டுக்கள் வெடித்து இடியோசை எழுப்பின. பீரங்கி முழக்கம் நாலா திசைகளிலும் எதிரொலித்தபடி இருந்தது.

பீரங்கித் தாக்குதலால் நகரின் பல இடங்களிலும் வீடுகள், கட்டடங்கள் சேதம் அடைந்தன. பொதுமக்கள் பலர் காயமடைந்தனர். (ஒ)

## 'அவ்ரோ' வீசிய புகைக் குண்டுகள்!

யாழ்ப்பாணம், செப். 14

கடந்த சில நாட்களாக இரவில் பீப்பாய்க் குண்டுகளை வீசி அனர்த்தம் புரிந்து வந்த அவ்ரோ நேற்று மாலை யாழ். நகரின் மீது அடுத்தடுத்து புதுவித புகைக் குண்டுகளை வீசியது.

அனேகமானவை குடியிருப்புப் பகுதிகள் மீதே வீசப்பட்டன. கோட்டையை அண்டிய பகுதிகள் மீதும் வீசப்பட்டன.

அந்தப் புகைக் குண்டு அவ்ரோவில் இருந்து வெளியேறும்போதே வெண் புகையைக் கக்கியபடி -மேலிருந்து கீழ் நோக்கி ஒரே சீரான வேகத்தில்- பார்ப்பதற்கு மத்தாப்பு போல் நிலத்தில் வந்து வீழ்ந்தன.

புகைக் குண்டுகள் விமானத்தில் இருந்து வெளியேறும் போதோ, நிலத்தில் வந்து விழும்போதோ எதுவித சத்தமும் எழவில்லை.

முத்திரைச் சந்தைப் பகுதியில் இரு இடங்களிலும், நாயன்மார்கட்டு, அத்தியடி மற்றும் பல இடங்களிலும் இந்தக் குண்டுகள் வீழ்ந்தன. சில இடங்களில் விழுந்த பிரஸ்தாப குண்டுகள் ஓரிரு

(மறு பக்கம் பார்க்க)

## கோட்டையை மீட்டதாக அரசாங்கம் கூறுகிறது

கொழும்பு, செப். 14

யாழ்.கோட்டை இராணுவ முகாமை விடுதலைப் புலிகளின் முற்றுகையிலிருந்து அரசப் படையினர் விடுவித்ததாக இலங்கை அரசின் சார்பில் இராணுவ அதிகாரி ஒருவர் கொழும்பில் நேற்றுத் தெரிவித்தார்.

யாழ். கோட்டை இராணுவ முகாமைப் பிடிக்க அரசுப் படைகளுக்கும் விடுதலைப் புலிகள் போராளிகளுக்கும் இடையே நேற்று நடைபெற்ற சண்டையில் 16 படையினர் உயிரிழந்தனர்; 40 பேர் படுகாயமடைந்தனர் என்று கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

அச்சண்டையின்போது அரசுப் படையினர் ஒரு சண்டை விமானத்தை இழந்தனர் என்றும் —

அதற்கு விமானத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறே காரணம் என்றும் கூறப்பட்டதாக பி.பி.சி. செய்தியாளர் கிறிஸ்தோபர் மொரிஸ் நேற்று மாலை தெரிவித்தார்.

யாழ்.கோட்டை இராணுவ முகாம் மீதான முற்றுகையை உடைத்துக் கொண்டு துருப்புக்கள் கடல் மார்க்கமாக கடற்படைப் படகுகள் மூலம்

(மறு பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 14

**யாழ்ப்பாணம் கோட்டையை விடுதலைப் புலிகளின் முற்றுகையிலிருந்து மீட்பதற்கு ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைகள் நேற்று எடுத்த பாரிய முயற்சி முறியடிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையின் போது ஸ்ரீலங்கா விமானப்படையின் குண்டு வீச்சு விமானம் ஒன்றும் மண்டைதீவு கடலுக்குள் சுட்டு வீழ்த்தப்பட்டது. இவ்வாறு விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்தனர்.**

நேற்றைய மோதல் சம்பவங்கள் குறித்து விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நேற்றிரவு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது;-

யாழ். கோட்டை இராணுவ முகாமை எமது முற்றுகைக்குள் இருந்து மீட்பதற்காக ஸ்ரீலங்கா படைகளினால் மேற்கொள்ளப்பட்ட பாரிய முயற்சி ஒன்று எம்மால் முறியடிக்கப்பட்டது.

இந்த முயற்சியின்போது ஸ்ரீலங்காவின் குண்டு வீச்சு விமானம் ஒன்று எம்மால் மண்டைதீவுக் கடலுக்குள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது.

## 25 படையினர் பலி! படகுகள் மூழ்கடிப்பு!!

இன்று அதிகாலை சுமார் 5-30 மணியளவில் மண்டைதீவிலிருந்து நூற்றுக் கணக்கான இராணுவத்தினர் யாழ். கோட்டையை நோக்கி கடற்படைப் படகுகள் மூலம் முன்னேற முயன்றனர்.

இவர்கள் மீது கடலுக்குள் வைத்தே எம்மால் தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலின்போது 25 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்துள்ளனர்.

இவர்களது சடலங்கள் கடலுக்குள்ளும், கடற்கரைகளிலும் கிடக்கின்றன.

இராணுவத்தினரை ஏற்றி வந்த கடற் படைப் படகுகள் சில மூழ்கடிக்கப்பட்டு விட்டன.

காயமடைந்த பல இராணுவத்தினரைக் கைவிட்ட நிலையில், ஏனைய படகுகள் மண்டைதீவுக்குத் தப்பிச் சென்றுவிட்டன.

## இராணுவத்தினர் சிலரே உட்சென்றனர்

தரையிறங்கிய ஒரு சில இராணுவத்தினர் கோட்டைகுள் சென்றுவிட்டனர்.

இராணுவத்தினரின் இம் முயற்சிக்கு உதவியாக வானிலிருந்து குண்டு வீச்சு விமானங்களும், ஹெலிக்கொப்டர்களும் பறந்தபடி பாரிய தாக்குதல்களைத் தொடுக்க, கடற்படைக் கப்பல்களிலிருந்தும், மண்டைதீவுப் பகுதியிலிருந்தும் கோட்டை முகாமைச் சூழவிருந்த எமது நிலைகள் மீது குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

## புலிகள் போராளிகள் சிலர் வீரமரணம்

ஸ்ரீலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்ட இப்பாரிய முப்படை நடவடிக்கையை முறியடிக்கும் யுத்தத்தில் எமது போராளிகள் சிலர் வீரமரணமடைந்தனர்.

இவர்களில் பெண் புலி அஞ்சலா உட்பட ஆனந்தபாபு, றெஜினோல்ட் ஆகியோரின் பெயர் விவரங்கள் கிடைத்துள்ளன.

## நகரில் இரசாயனக் குண்டு வீச்சு!

இதே சமயம் இன்று மாலை 5 மணி தொடக்கம் 6 மணிக்கு இடையில் சுமார் பத்துக்கும் மேற்பட்ட இரசாயனக் குண்டுகளை ஸ்ரீலங்கா வான் படையின் குண்டு வீச்சு விமானங்கள் யாழ். நகரப் பகுதியில் வீசிக்கொண்டிருந்தன.

விமானங்களில் இருந்து வீசப்பட்டவுடன் அடர்ந்த வெண்புகையுடன் கீழ் நோக்கி வரும் இக் குண்டுகள் சிறிய சத்தத்துடன் நிலத்தில் வீழ்ந்து வெடித்துச் சிதறி, புகைமண்டலமாகப் பரவின.

இந்தப் புகையானது கண் எரிவை உண்டாக்குவதுடன், இதைச் சுவாசிப்பவர்களை சாதாரண மயக்க நிலைக்கு உள்ளாக்குவதாக இதனால் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கிறார்கள்.

## கோட்டை நிலைகளில் புலிகள் உறுதி

இன்று அதிகாலை இந்த இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள முன்னர் இரவு முழுவதும் அவ்ரோ விமானங்களில் இருந்து தொடர்ச்சியாக நகர்ப் பகுதி எங்கும் இலக்குகள் எதுவுமின்றி பீப்பாய்க் குண்டுகள் வீசப்பட்டுக் கொண்டிருந்தன.

இராணுவத்தின் இப்பாரிய முயற்சி முறியடிக்கப்பட்டதுடன், கோட்டை இராணுவ முகாமைச் சுற்றியுள்ள எமது நிலைகளில் தொடர்ந்தும் நாம் உறுதியாக நிலைகொண்டுள்ளோம்.

—இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## விமான ஓட்டியைத் தேடி வாவியில் கடற்படை வேட்டை

கோட்டை மோதலில் ஒற்றை என்ஜின் பொருத்தப்பட்ட 'சியாசெட்டி' பொம்மர் விமானம் இயந்திரக்கோளாறு காரணமாக வாவியில் இறங்கியதாக பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

விமானமோட்டியைக் காணவில்லை அவரைக் கண்டு பிடிக்கும் பணியில் கடற்படை சுழியோடிகள் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## பொலிகண்டியிலும் நேற்று அவ்ரோ குண்டு வீச்சு

### குழந்தை பலி; நால்வர் காயம்

யாழ்ப்பாணம், செப்.14

வடமராட்சியில் பொலிகண்டிப் பகுதியிலும் நேற்று அவ்ரோ குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியது.

குடியிருப்பு பகுதி மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் குழந்தை ஒன்று உயிரிழந்தது. மற்றும் நால்வர் காயமடைந்தனர். (ஒ)

## ஆனையிறவில் சிப்பாய் பலி

ஆனையிறவு இராணுவ முகாம் காவல் அரண் மீது நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய சினைப்பர் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். (ஒ)

## பாதுகாப்புச் செலவு 1,700 கோடி ரூபா!

லண்டன், செப். 14

இலங்கை அரசின் 1991 ஆம் ஆண்டிற்கான பாதுகாப்புச் செலவு ஆயிரத்து 700 கோடி ரூபாவாக அதிகரித்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது;

அதில் பெரும் பகுதி இராணுவத்திற்கென ஒதுக்கப்பட்டிருப்பதாகவும்-

வடக்கிலும் கிழக்கிலும் புலிகளுக்கு எதிரான போரில் இலங்கை அரசு இராணுவத்தில் பெரும் நம்பிக்கை வைத்திருப்பதையும்-

(மறு பக்கம் பார்க்க)

## 2 சிப்பாய்கள், 2 ஊர்காவலர் ஏறாவூர் தாக்குதலில் பலி

யாழ்ப்பாணம், செப். 14

ஏறாவூரில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவச் சிப்பாய்கள் இருவரும், ஊர்காவல்படையைச் சேர்ந்த இருவரும் உயிரிழந்தனர்.

நேற்றுமுன்தினம் (புதன் கிழமை) இந்தச்சம்பவம் இடம்பெற்றது. (ஒ)

## குண்டு வீச்சுக் குறித்து 'தூரதர்ஷன்' தகவல்!

சென்னை, செப். 14

யாழ். கோட்டையை மீட்பதற்காக இலங்கை இராணுவம் 60 ஆயிரம் அப்பாவித் தமிழ் மக்கள் வசிக்கும் யாழ். நகர் மீது கண்மூடித்தனமான குண்டு வீச்சை நடத்தியதாக 'தூரதர்ஷன்' நேற்றிரவு தனது தமிழ்ச் செய்தியில் தெரிவித்தது: (உ)

# நள்ளிரவு விமானக் குண்டு வீச்சினால்

# 9 முஸ்லிம்கள் உயிரிழப்பு! 29 பேர் படுகாயம்!!

யாழ்ப்பாணம், செப். 14

அவ்ரோ விமானத்தில் இருந்து வீசப்பட்ட பீப்பாய் குண்டினால் குழந்தைகள், பெண்கள் உட்பட 9 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

உயிரிழந்தோரில் 8 பேர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

இச்சம்பவம் புதன்கிழமை இரவு 11.10 மணிக்கு யாழ். முஸ்லிம் பகுதியில் கலீபா அப்துல் காதர் வீதியில் இடம்பெற்றது.

சம்பவத்தில் 29 முஸ்லிம்கள் வரை காயம் அடைந்தனர். கால் நடைகள் பல இறந்தன. 3 வீடுகள் முற்றாக சேதமடைந்தன. மேலும் 13 வீடுகள் சேதமுற்றன.

காயம் அடைந்தவர்கள் மானிப்பாயில் உள்ள யாழ். போதனா வைத்தியசாலைப் பிரிவுக்கு எடுத்துச்செல்லப் பட்டனர்.

சம்பவத்தில் இறந்தவர்கள் வருமாறு:-

ஆய்ஷா உம்மா அப்துல் அஸீஸ் [வயது 70]
குசைனா பஸீர் [வயது 45]
கௌலா ஜமீல் [வயது 25]
ஸிபா ஜமீல் [வயது 13]
பர்ஸானா ஜமீல் [வயது 10]
முனிரா ஜமீல் [வயது 8]
சபீனா ஜமீல் [வயது 6]
அப்துல் ரஸீத் முகம்மது சாஜித் [வயது 14].

இவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களைத் தவிர படுகாயமுற்ற ஜுலேரியா என்ற நபர் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

சம்பவத்தில் காயம் அடைந்தோர் வருமாறு:-

கச்சமுகம்மது ஹமீத் [வயது 38], நதுயா சம்ஷலீன் [வயது 24], அப்துல் அஸீஸ் முகம்மது அப்துல் ரஸீத் [வயது 50],

(மறு பக்கம் பார்க்க)

## மயிலிட்டியில் போராளி வீரமரணம்

யாழ்ப்பாணம், செப்.14

கடந்த புதன்கிழமை மயிலிட்டிப் பகுதியில் விடுதலைப் புலிகளின் காவல் அரண் ஒன்றின் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் போராளி ஒருவர் வீரமரணமடைந்தார்.

கலாபரன் [மனோஜ் மோகன்-மட்டக்களப்பு] என்பவரே அந்தப் போராளி ஆவார். [ஒ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

14 - 09 - 1990 வெள்ளிக்கிழமை


# நகரில் குடியிருப்பு பகுதிகள் மீது நேற்று ஹெலி ஒயாது தாக்குதல்

யாழ்ப்பாணம், செப். 14

யாழ். நகரையும் அதனை அண்டிய எல்லாப் பகுதிகளிலும் நேற்று முழு நாளும் ஹெலி ஓயாது - சலிக்காது தொடர்ந்து தாக்குதல்களை நடத்திக்கொண்டே இருந்தது.

யாழ். நகரப்பகுதியில் ஹெலிகள், ஒன்றுவிட்டுஒன்று மாறி வந்த வண்ணம் தாக்குதலை நடத்தின.

குடியிருப்புப் பகுதிகள், வீதிகள், ஒழுங்கைகள் என்று எல்லா இடங்களிலும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

வீதிகளில்- ஒழுங்கைகளில் மக்களைக் கண்டவுடன் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. இதனால் மக்கள் நடமாட்டத்தை பெருமளவு குறைத்துக்கொண்டனர்.

இதேவேளை நேற்று சீனச் சகடை விமானம், பொம்மர்கள் மற்றும் அவ்ரோ எல்லாமே மாறி மாறி குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

நேற்றிரவும் அவ்ரோ தனது வழமையான குண்டு வீச்சை குடியிருப்புப் பகுதிகள் மீது நடத்தியது.

இரவு நடந்த தாக்குதலின் சேதங்கள் குறித்து செய்தி அச்சுக்கு போகும்வரை தகவல் ஏதும் கிடைக்கவில்லை. [ஒ]

## ஜேர்மன் பிரிவினை முடிவு சோவியத் - அமெ: ஒப்பந்தம்

மாஸ்கோ, செப். 14

45 ஆண்டு காலமாகஇருந்த ஜேர்மன் பிரிவினையை முடிவுக்குக் கொண்டு வரும் உடன்படிக்கை ஒன்று நேற்று சோவியத் யூனியனின் தலைநகர் மாஸ்கோவில் கைச்சாத்திடப்பட்டது.

கிழக்கு, மேற்கு ஜேர்மனிகளின் பிரதிநிதிகளுடன், இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது நேசநாடுகளாக விளங்கிய சோவியத் யூனியன், அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

ஐக்கிய ஜேர்மனி உருவாவதற்கு இருந்த இறுதித் தடையும் இதன்மூலம் நீங்கியது.

எதிர்வரும் அக்டோபர் 3 ஆம் திகதி முதல் உலகில் ஒரே ஒரு ஜேர்மனி நாடு தான் இருக்க இந்த உடன்படிக்கை வழி வகுத்துள்ளது. (இ-எ)

## கட்டுத்துவக்கு வெடித்து காயம்

யாழ்ப்பாணம், செப். 14

வேலியக்கச்சி, சங்கத்தாவலவில் வீதியில் கட்டுத்துப்பாக்கியால் தோட்டா செய்த ஒருவர்அதை இறக்கும்போது அது தவறுதலாக வெடித்ததில் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் கந்தையா சுப்பிரமணியம் (வயது 36) என்பவரே படுகாயமடைந்தவர். (உ-15)

## தளபதிகள் யாழ்.வந்தனராம்

கொழும்பு, செப். 14

கோட்டையை மீட்கும் இராணுவத்தினரின் முயற்சியை முப்படைத் தளபதிகள் யாழ்ப்பாணம் சென்று மேற்பார்வையிட்டனராம். (ஒ)

## பாதுகாப்பு---

(முன் பக்கத் தொடர்ச்சி)

தற்போதுநடக்கும் சண்டை ஒரு நீண்ட கால யுத்தமாகத் தொடரும் நிலையினையும் இது எடுத்துக்காட்டுவதாகவும் பி.பி.ஸி. அறிவித்தது. (உ-5)

## இந்திய விமானத்தைக் கொழும்புக்கு கடத்தமுயன்ற இலங்கைமாணவன்

சென்னை, செப் 14

"இந்தியன் எயர்லைன்ஸ்" விமானம் ஒன்றை கொழும்புக்கு கடத்த முயற்சித்த பொறியியல் மாணவன் ஒருவனை பெங்களூர் பொலிஸார் கைது செய்தனர்.

அந்த மாணவனின் பெயர் மகாலிங்கம்.

நேற்றுக் காலை கோயம்புத்தூரில் இருந்து புறப்பட்டு பெங்களூர் வழியாக சென்னை செல்லும் விமானத்தில், கோயம்புத்தூரில் வைத்து நேற்றுக் காலை 8.25 மணியளவில் மகாலிங்கம் பயணத்தை ஆரம்பித்தார்.

பெங்களூரை நெருங்கும் சமயம், தனவிடம் கிரனேட் இருப்பதாகவும், விமானத்தை இலங்கைக்கு கொண்டு போகும்படியும் இல்லாவிடில் விமானத்தைக் குண்டு வைத்து தகர்க்கப் போவதாகவும் விமானமோட்டியை இந்த மாணவன் பயமுறுத்தினான்.

விமானமோட்டியோ சாகஸமாக விமானத்தில் எரிபொருள் குறைவாக இருக்கிறதென்றும் பெங்களூர் விமான நிலையத்தில் தேவையான எரிபொருளை எடுத்துக் கொண்ட பின்னர் இலங்கை செல்லலாம் என்றும் மகாலிங்கத்திடம் கூறினார். மகாலிங்கமும் அதனை ஏற்றுக் கொள்ளவே, விமானம் பெங்களூரில் இறங்கியது.

ஆனால் அங்கு வைத்து பெங்களூர் பொலிஸார் மகாலிங்கத்தை கைதுசெய்தனர்.

மகாலிங்கம் ஒரு மனநோயாளி என்று பின்னர் கூறப்பட்டது.

இதன்காரணமாக அந்த விமானம் 2 மணித்தியாலம் தாமதமாக சென்னைபோய்ச் சேர்ந்தது. (உ-எ)

## காங்கேசனில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 14

காங்கேசன்துறையில்நேற்று முன்தினம் இரவு கடற்படையினர் நடத்திய பீரங்கித் தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்தார்.

குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டஇப்பீரங்கித்தாக்குதல் சம்பவத்தில் கருங்பானையைச் சேர்ந்த கோபால் சிற்சபேசன் (வயது 25) என்பவர் படுகாயமடைந்தார். [உ-15]

## துறைநீலாவணையில் இராணுவ அதிகாரி பலி!

கொழும்பு, செப் 14

மிழக்குமாகாணத்தில் துறைநீலாவணை என்னுமிடத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் இராணுவ அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார். மூன்று படையினர் காயமடைந்தனர்.

பாதுகாப்பு அமைச்சு நேற்றுவிடுத்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## இரு தமிழர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், செப். 14

அம்பாறை, சாகாமத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை விசேட அதிரடிப் படையினர் இரு தமிழ் மக்களை சுட்டுக் கொன்றனர் என்று விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. [ஒ]

## 535 சடலங்களின் படங்கள் பொலீஸார் பறிமுதல்

தென் பகுதியில் இடம் பெற்ற வன்செயல்களின் போது வீதிஓரங்களில் சுட்டெரிக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட சடலங்களின் 535 புகைப்படங்களை கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வைத்து மனித உரிமைப் பிரமுகர் ஒருவரிடம் இருந்து, பொலீஸார் கைப்பற்றினர்.

ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமை மாநாட்டில் சமர்ப்பிப்பதற்காக இப்புகைப்படங்களுடன் வேறு சில ஆவணங்களையும் தென்மாகாணத்தைச் சேர்ந்த அந்தப் பிரமுகர் எடுத்துச் செல்ல முயற்சித்தார் என்றும் கொழும்புத் தகவல்கள் கூறின. [உ-எ]

## அந்தோனியார் ஆலயம் இன்று திறப்பு

கொழும்பு, செப். 14

கடந்த 25 தினங்களாக மூடப்பட்டிருந்த கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயம் இன்று வெள்ளிக்கிழமை மீண்டும் பேராயர் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோவால் திறந்து வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## செஞ்சிலுவை சங்கம் மூலம் முல்லைத்தீவுக்கு மருந்து

### எனினும் டாக்டர் பற்றாக்குறை

முல்லைத்தீவுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் மருந்து வகைகள் அனுப்பி வைக்கப்பட்டன.

முல்லைத்தீவில், இராணுவ நடவடிக்கையால் மருத்துவ வசதிகள் ஏதுமின்றி பொது மக்கள் பெரும் கஷ்டங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

பொம்மர் குண்டுவீச்சால் முல்லைத்தீவு பொது வைத்தியசாலை தரைமட்டமாக்கப்பட்டதால் தற்போது புதுக்குடியிருப்பில் இந்த ஆஸ்பத்திரி இயங்கி வருகிறது.

குமுழமுனை, வீஸ்வமடு, உடையார்கட்டு ஆகிய பகுதிகளில் செஞ்சிலுவைச் சங்கத்தின் நடமாடும் வைத்திய சேவையும் நடைபெற்று வருகிறது.

கடந்த செவ்வாய் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் ஒரு டிராக்டரிலும் இரு "பிக்கப்" வாகனங்களிலும் மருந்து வகைகள் எடுத்துச் செல்லப்பட்டன. ஆயினும் புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியில் வைத்தியர் பற்றாக்குறை நிலவுவதால் பொதுமக்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர் என அறியப்படுகிறது. (இ-7)

## ஷெல் வீச்சுக்கு இரு பெண்கள் காயம்

யாழ்ப்பாணம், செப். 14

ஒட்டமாவடியில் இருந்து மீராவோடை பகுதியை நோக்கி இராணுவத்தினர் ஷெல் தாக்குதல் மேற்கொண்டனர்.

கடந்த செவ்வாய்க் கிழமை நடந்த இந்த ஷெல் வீச்சுக்கு இலக்காகி இரு பெண்கள் காயமடைந்தனர். (ஒ)

## ஹெலி தாக்குதலால் நேற்று சந்தைகள் கலைந்தன

திருநெல்வேலி, செப். 14

நேற்றுக்காலை மக்கள் கூட்டமாகக் காணப்பட்ட இடங்களில் எல்லாம் ஹெலியில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டது.

சுன்னாகம், மருதனாமடம், இணுவில், கல்வியங்காடு, திருநெல்வேலி, கொக்குவில் சந்தைகள் மீது ஹெலியில் இருந்து தாக்குதல்கள் நடத்தப்பட்டதால் இடையில் சந்தைகள் கலைந்தன.

ஆனால் வியாபாரிகள் வேறு இடங்களில் வைத்து பொருள்களை விற்றதைக் காணக் கூடியதாக இருந்தது. (இ-143)

## நகரில் புதன் இரவு முழுவதும் அவ்ரோ விமானம் அட்டகாசம்

யாழ்ப்பாணம், செப். 14

நேற்று முன்தினம் [புதன்] இரவு சிறிய இடைவெளி விட்டு விட்டு நான்கு தடவைகள் அவ்ரோ விமானம் குடியிருப்புப்பகுதிகள் மீது இலக்கு ஏதுமின்றி குண்டுகளை வீசித் தாக்கி அட்டகாசம் புரிந்தது.

நகரின் பல பகுதிகளிலும் பீப்பாய்க் குண்டுகள் விழுந்து வெடித்தன. இதனால் இரவு முழுவதும் நகரம் அதிர்ந்தபடி இருந்தது.

இரவு முழுவதும் அவ்ரோ எழுப்பியஉறுமலாலும், குண்டுகளின் இடியோசையாலும் மக்கள் பீதியுடன் காணப்பட்டனர்.

நகர மக்கள் பதுங்குகுழிக்குள் ஒடுவதும் வீட்டுக்குத் திரும்பி வருவதுமாக இரவைக் கழித்தனர்.

கணக்கு வழக்கின்றி விழுந்து வெடித்த குண்டுகளினால் நகருள் பல பகுதிகளிலும் அனேக கட்டடங்கள் பலத்த சேதமடைந்தன.

இரவு 10. 45 மணி அளவில் ஆரம்பமான அவ்ரோ தாக்குதல் அதிகாலை 5 மணிவரை சிறியஇடைவெளிவிட்டுவிட்டு நடந்தது.

அதிகாலை அவ்ரோ தனது 'கடமை'யை இடைநிறுத்திய போது இராட்சத சகடை விமானம் நகருக்குள் பிரவேசித்தது.

அதனை அடுத்துகோட்டை பகுதியில் பெரும் மோதல் மூண்டது. செவிப்பறையை வெடிக்கவைக்கும் பீரங்கி வேட்டுகள்முழங்கின.தொடர்துப்பாக்கி வேட்டுக்களும் கேட்டன. [ஒ]

## இந்தியத் தூதுக் குழுவின் வருகை பயனற்றது!

### இப்படிக் கூறுகிறார் வாழப்பாடி

இந்திய நாடாளுமன்றத் தூதுக்குழு இலங்கை செல்வதால் எதுவித பிரயோசனமும் ஏற்படப்போவதில்லை.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

இலங்கையில் தமிழர் படுகொலை செய்யப்படுவதை நிறுத்தஇந்திபமத்தியஅரசும், மாநில அரசும் எதுவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை என்றும் திரு. இராமமூர்த்தி தெரிவித்தார். [ஒ-எ]

## அகதிக் குழந்தையும் ஹெலிவேட்டினால் காயம்

யாழ்ப்பாணம், செப்.14

இருபாலைப் பகுதியிலும் நேற்று ஹெலி கண்டபடி தாக்குதல்களை நடத்தியது.

காலையில் நடந்த தாக்குதலின் போது வீட்டில் நித்திரையில் ஆழ்ந்திருந்த பச்சிளம் குழந்தை ஒன்று படுகாயமுற்றது.

இந்தக் குழந்தையின் பெற்றோர் புளியங்கூடல் பகுதியில் இருந்து இருபாலைக்கு அகதிகளாக வந்து தங்கியிருந்தனர்.

அண்மையில் தீவுப்பகுதியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையை அடுத்தே இவர்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்தனர்.

இதேவேளை பீரங்கித் தாக்குதலில் யாழ். மருதடி வீதியில் இளம் பெண் ஒருவர் காயமடைந்தார். ஈச்சமோட்டையில் ஹெலி தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் படுகாயமுற்றார். (ஒ-5)

## பொருள் விலை திடீர் அதிகரிப்பு

திருநெல்வேலி, செப். 14

யாழ். கிளிநொச்சி மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொருள்கள் வழமையிலும் பார்க்க கூடிய விலையில் விற்பனை செய்யப்பட்டன. (இ-143)

## கோட்டையை மீட்ட....

[முன் பக்கத் தொடர்ச்சி]

கோட்டைக்குள் நுழைந்தனர் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன என்றும் பி.பி.ஸி. வானொலி மேலும் தெரிவித்தது.

யாழ். கோட்டை இராணுவ முகாமை இராணுவம் கைப்பற்றிவிட்டதாக அரசு கூறிக்கொண்டாலும் யாழ். குடாநாட்டின் பெரும்பாலான பகுதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் தான் இன்னமும் இருப்பதாக பி.பி.ஸியின் கொழும்புச் செய்தியாளர் மேலும் தெரிவித்தார்.

யாழ். கோட்டை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இல்லாவிடினும் இக்கோட்டையை கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பவர் யாழ். குடாநாட்டை ஆளுபவராக கருதப்படுகிறார் என்ற நிலைப்பாடு காரணமாகவே தற்போதைய சண்டையில் இக்கோட்டை முக்கியத்துவம் பெற்றிருக்கிறது என்று பி.பி.ஸி. செய்தியாளர் அறிவித்தார்.

இதேசமயம் —

யாழ்ப்பாணம், இளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நேற்றுக் காலை 6.00 மணி முதல் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் அறிவித்தது.

ஊரடங்கை மீறி வீதிகளில் ஒழுங்கைகளில் நிற்போர், சைக்கிள்களில் செல்வோர் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள் என்றும் இப்படியானவர்கள் சுடப்படலாம் என்றும் அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு நீக்கப்படும் போது அது பற்றிய அறிவிப்பு வெளிவரும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி ஊர்காவற்றுறையில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பித்தப்பட்டபோது ஹெலிக் கொப்டர்களில் இருந்து போடப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் மூலம் ஊரடங்கு பற்றி அறிவிக்கப்பட்டது.

அந்த ஊரடங்கு இம் மாதம் 5 ஆம் திகதியுடன் நீக்கப்பட்டதாக அரசு இம் மாதம் 11 ஆம் திகதி தான் அறிவித்திருந்தது.

இந்த அறிவிப்பு வந்து 5 நாள் இடைவெளிக்குள் மீண்டும் ஊரடங்கு நேற்றுமுதல் அமுலுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## 'அவ்ரோ'...

(முன் பக்கத் தொடர்ச்சி)

நிமிடங்கள் புகையை எழுப்பியபடி தீப்பிழம்பாக எரிந்து உடனே கருகின. இன்னும் சில இடங்களில் விழுந்ததுமே அணைந்துவிட்டன.

இதில் இருந்து வெளியேறிய புகை கண்களை எரியச் செய்வதாக இருந்ததாகக் கூறப்பட்டது. இந்தப் புகைக் குண்டினால்வேறுவிபரீதங்கள் ஏற்படும் ஆபத்து இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்பட்டது.

சுமார் ஒன்றரை அடி உயரமும் மூன்று அடி சுற்றளவும் கொண்ட மெல்லிய கம்பிகளால் உருவாக்கப்பட்ட கூட்டிற்குள் சாக்கு போன்ற பொருள் காணப்பட்டது. இதில் இருந்தே புகை வெளியேறியது.

குடிசைகள் உள்ள பகுதிகளில் இந்தக் குண்டுகள் விழுந்திருந்தால் பெரும் தீப்பிடித்து ஏற்படக் கூடிய ஆபத்தும் இருந்தது. [ஒ-15-143]

## வள்ளிரவு விமானக்....

(முன் பக்கத் தொடர்ச்சி)

மனைவி சாயிரா அப்துல் [வயது 46]. பிள்ளைகள் அனிரா அப்துல்ரஸீத் [வயது 21], ஜமாலியா அப்துல்ரஸீத் [வயது 18], றிஸ்னா அப்துல் ரஸீத் [வயது 6].

லெவ்வை சம்சுத்தீன் [வயது 70], மைமூன் சம்சுத்தீன் [வயது 65] ,சம்சுத்தீன் முகம்மது ஜமீல் [வயது 44], முகம்மது ஜமீல் ஜவ்றான் [வயது 9 மாதம்], முகம்மது ஜமீல் ஸிபான்[வயது 11],சம்சுத்தீன் முகம்மது ஜமீல் [வயது 46], முகம்மது ஜமீல் றியாஸ் [வயது 17 ], முகம்மதுஜமீல் றிஸ்வானா [வயது 10], சம்ஸியாகரீம்[வயது 24].

மீரான்சாகிப் அப்துல்ரகீம் [வயது36], யுபைரியா அப்துல் ரகீம்[வயது34], யுஸ்ரியாஅப்துல் ரகீம் [வயது 7], அப்துல் ரகீம் ஸிவ்னாஸ் [வயது 4 , றியானா அப்துல்ரகீம் [வயது 9], புகாரி முகம்மது ஜமீல் [வயது 34], சுகைலாமுகம்மது ஜமீல் [வயது 30],ஜனூஸியா சம்சுத்தீன் [வயது 30], அப்துல் ரகுமான் முகம்மதுபஸீர் [வயது 52], நிஸானா முகம்மது பஸீர் [வயது 22], ஸிபா முகம்மது பஸீர் [வயது 18], சகீலா மக்பூல் [வயது 17], எஸ். ராசா [வயது 16].

குண்டுவீச்சுச் சம்பவத்தை அடுத்துஅப்பகுதியில் இருந்து பல குடும்பங்கள் நேற்று இடம்பெயர்ந்தன. [இ-15]


## மரண அறிவித்தல்

"கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்" (பிலிப்பியர் 1:21)

### சின்னத்தம்பி யோசுவா

(Cargo Sup East & West Co. Ltd. Dammam K.S.A.)

சின்னத்தம்பி யேசுவா 05-09-90 சவூதியில் அகால மரணமடைந்தார். இவர் ஸ்பிரியேல் திலகம் (Rita-குருநகர்) இன் அன்புக் கணவரும், யோவாஸ் இன் அன்புத் தந்தையும், சின்னத்தம்பி பொன்னு (அராலி) வின் கனிஷ்ட புதல்வனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் சவூதியில் நடைபெற்றது. உற்றார், உறவினர், நண்பர்கள் இத் தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொன்னுத்துரை ரவிந்திரன்,
யோசேப் பத்திநாதன்.
[குருநகர்]

வட்டு. மேற்கு,
வட்டுக்கோட்டை.
(14196)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 14-09-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது



## மரண அறிவித்தல்

### திரு. கந்தையா கோபாலபிள்ளை

[பிரபல வர்த்தகரும், சமாதான நீதவானும் ஜே.பி]

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொட்டடி வைரவர் கோவிலடியில் வசிப்பவருமாகிய கந்தையா கோபாலபிள்ளை அவர்கள் 13-9-90 வியாழக்கிழமை காலை 10.30மணியளவில் சாவகச்சேரியில் காலமானார். அன்னார் இல, 23 கே.கே.எஸ் வீதி கோபால் அன் சன்ஸ் உரிமையாளரும், காலஞ்சென்ற கந்தையாவினதும், திருமதி செல்லம்மா கந்தையாவின் அன்பு மகனும், கமலா தேவியின் அன்புக் கணவரும், அன்பழகன், அருட்செல்வன் [கனடா], கதர்சினி, அருட்குமரன், ஜகன்யா, அருட்தீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 14-09-1990 இன்று வெள்ளிக்கிழமை மாலை சாவகச்சேரியில் தற்போது தங்கியிருக்கும் டச்சுவீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பெட்டி மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
என். கணபதிப்பிள்ளை
[சகலன்]

இல: 20/5 வைரவர் கோவில் ஒழுங்கை,
கொட்டடி, யாழ்ப்பாணம்.
(14197)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org